செ.வெ.எண்:36 நாள்:20.01.2018

**திருநெல்வேலி மாவட்டத்தில் அம்மா இருசக்கர வாகனம் வழங்கும் திட்டத்தின் கீழ் 22.01.2018 முதல் மகளிர் விண்ணப்பிக்கலாம் - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி இ.ஆ.ப, அவர்கள் தகவல்**

---------------------------------------------

**திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் திருநெல்வேலி மாவட்டத்தில் அம்மா இருசக்கர வாகனம் வழங்கும் திட்டம் தொடர்பான விண்ணப்பங்கள் பெறுதல், இருசக்கர வாகனம் வழங்குதல் தொடர்பான முன்னேற்பாடு ஆலோசனை கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி இ.ஆ.ப,அவர்கள் தலைமையில் இன்று (22.01.2018) நடைபெற்றது.**

**இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசியதாவது:**

தமிழ்நாடு அரசு ஊரக மற்றும் நகர்ப்புற பகுதிகளில் உள்ள உழைக்கும் மகளிருக்கு **அம்மா இருசக்கர வாகன திட்டம்** என்ற புதிய திட்டத்தினை 2017-2018-ஆம் நிதி ஆண்டில் செயல்படுத்தவுள்ளது. இத்திட்டதின் கீழ் திருநெல்வேலி மாவட்டத்தில் கிராம பகுதியில் 2257 பெண்களுக்கும்,நகர்புற பகுதியில் 2199 பெண்களுக்கும் என மொத்தம் 4455 பெண்களுக்கு மானிய விலையில் அம்மா இருசக்கர வாகனம் வழங்கபடவுள்ளது. இத்திட்டத்தில் பயன் பெற கியர் இல்லா அல்லது தானியங்கி கியருடன் கூடிய 125CC எந்திரத் திறனுக்கு கீழ் கொண்ட புதிய இருச்சக்கர வாகனங்களுக்கு வாகன விலையில் ரூ.25000/- அல்லது 50% வாகன விலை இதனில் குறைவான தொகை பயனாளிக்கு அரசினால் வழங்கப்படும். இருசக்கர வாகனம் 01.01.2018 பின்னர் தயாரிக்கப்பட்டதாக இருக்க வேண்டும்.

**பயனாளிகளின் தகுதி:**

1. நிறுவனப் பணியிலுள்ள மற்றும் முறைசாரா பணியிலுள்ள பெண்கள்.
2. கடைகள் மற்றும் இதர நிறுவனங்களிலுள்ள பெண்கள்.
3. அரசு சார்பு நிறுவனம், தனியார் நிறுவனம், சமுதாய அமைப்புகள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு(PLF), கிராம வறுமை ஒழிப்பு சங்கம் (VPRC) மற்றும் மகமை அலுவலகத்தில் பணிபுரியும் பெண்கள்.
4. பெண் வங்கி ஒருங்கிணைப்பாளர் (Bank Coordinator) மற்றும் பெண் வங்கி வழிநடத்துநர்கள் (Bank Facilitator) மற்றும் அங்கீகாரம் பெற்ற சமூக சுகாதார (பெண்) ஆர்வலர்கள்(ASHA).

**வயது வரம்பு, வருமான வரம்பு மற்றும் இதர தகுதிகள்:**

தமிழ்நாட்டை சார்ந்த 18 முதல் 40 வயது வரையுள்ள இருசக்கர வாகன உரிமம் பெற்றுள்ள, ஆண்டு வருமானம் ரூ.2,50,000/-க்கு மிகாமல் உள்ள உழைக்கும் மகளிர் இத்திட்டத்திற்கு விண்ணப்பிக்கலாம். மேலும் ஊரின் கடைநிலைப்பகுதி ( Remote Area ) மலைப்பகுதி, மகளிரைக்குடும்பதலைவராக கொண்ட பெண், ஆதரவற்ற மகளிர், ஆதரவற்ற விதவை, மாற்றுதிறனாளி(பெண்), திருமணமாகாத 35 வயதுக்கு மேற்பட்ட மகளிர், தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் மகளிர் மற்றும் திருநங்கையினருக்கு இத்திட்டத்தில் முன்னுரிமை வழங்கப்படும்.

**விண்ணப்பங்கள் 22.01.2018 முதல் 05.02.2018 வரை ஊராட்சி ஒன்றியங்கள்/ பேரூராட்சி/நகராட்சி அலுவலகம், மாநகராட்சி மற்றும் மாநகராட்சியின் மண்டல அலுவலகங்களிலும் வழங்கப்படும்.** மேலும் விண்ணப்பங்களை tamilnadumahalir.org என்ற இணையதளத்திலும் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 05.02.2018 அன்று மாலை 5.00 மணி வரை சம்மந்தப்பட்ட அலுவலகங்களில் சமர்ப்பிக்க வேண்டும்.

**கடன் வசதி:**

பயனாளிகள் தங்களுக்கு விருப்பமுள்ள 125&& திறன் மற்றும் அதற்கு கீழ் கொண்ட இருசக்கர வாகனத்தினை சொந்த நிதியிலிருந்து அல்லது இந்திய ரிசர்வ் வங்கியின் கட்டுபாட்டிலுள்ள வங்கிகள் அல்லது நிதி நிறுவனங்கள் மூலம் கடன் வசதி பெற்றும் இத்திட்டத்தின் மூலம் பயன்பெறலாம்.

**விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள்:**

- பிறந்த தேதிக்கான சான்றிதழ்
- இருப்பிடச்சான்றிதழ் (வாக்காளர் அடையாள அட்டை/இருசக்கர வாகன உரிமம்/ஆதார் அடையாள அட்டையின் நகல்)
- உரிய அலுவலரால் வழங்கப்பட்ட இருச்சக்கர வாகன ஓட்டுநர் உரிமம் - நகல்.
- வேலை வழங்கும் அலுவலரால்/நிறுவனத்தால் வழங்கப்படும் வருமான சான்றிதழ் அல்லது சுய வருமான சான்றிதழ்.
- நிறுவனத்தலைவர் / சங்கங்கள் மூலம் ஊதியம் பெறுபவர்களின் ஊதியச்சான்றிதழ்.
- ஆதார் அடையாள அட்டை.
- எட்டாம் வகுப்பு மற்றும் அதற்கு மேற்பட்ட கல்வி தகுதியுள்ளவர்களின் சான்றிதழ்கள்.
- கடவுச்சீட்டு அளவுள்ள புகைபடம்.
- சிறப்பு தகுதி பெற விரும்புவோர் அதற்குரிய சான்றிதழ்.
- சாதி சான்றிதழ் (தாழ்த்தப்பட்ட/பழங்குடியினர் )
- உரிய அலுவலரால் வழங்கப்பட்ட மாற்றுதிறனாளி அடையாள அட்டை
- இருசக்கர வாகனத்தின் விலைப்புள்ளி (Quotation/ Performa Invoice)

இத்திட்டத்தினை 24.02.2018 அன்று தமிழக அளவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைக்க உள்ளார்கள் அன்றைய தினமே நமது மாவட்டத்தில் மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி வி.எம்.ராஜலெட்சுமி அவர்கள் தொடங்கி வைக்க உள்ளார்கள்.பெண்களின் முன்னேற்றத்தினை ஊக்கப்படுத்தும், தமிழக அரசின் முக்கிய திட்டமான இத்திட்டதினை திருநெல்வேலி மாவட்டத்தில் சிறப்பாக செயல்படுத்த அனைத்து துறை அலுவலர்களும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் திரு.பழனி,மாநகராட்சி ஆணையாளர் திரு.நாராயண நாயர்,மகளிர் திட்ட மாவட்ட திட்ட அலுவலர் திருமதி கெட்ஸி லீமா அமலினி,பேரூராட்சிகள் உதவி இயக்குனர் திரு. மாகின் அபுபக்கர், வட்டார போக்குவரத்து அலுவலர் திருமதி.சசி, முன்னோடி வங்கி மேலாளர் திரு. கஜேந்திரநாதன் மற்றும் அனைத்து வட்டார வளர்ச்சி அலுவலர்கள், அலுவலர்கள் கலந்து கொண்டனர்

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி